பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு

The EELANADU

Registered as a Newspaper at the General PostOffice Sri Lanka under No. QB/8945/78

மலர் 21 மாசி 21 ரபி-ஆகி 5 . இதழ் 23
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 5-3-79

# வன்செயலைக்கட்டுப்படுத்த விரைவில் புதிய சட்டம்?

[கொழும்பு]

வன்செயலில் ஈடுபடுபவர்கள் தொடர்பாக புதிய தொரு சட்டம் ஒன்றைக் கொண்டுவருவதற்கு அரசு ஆலோசித்து வருவதாக அறியப் படுகிறது.

நாட்டில் அதிகரித்துவரும் வன்முறைச் சம்பவங்களையடுத்து இது சம்பந்தமாக பொலிசாரின் ஆலோசனையுடன் அரசு இதுபற்றி யோசிப்பதாகத் தெரிகிறது.

வன்முறைச் செயலில் ஈடுபட்டதாகச் சந்தேகத்தின் பேரில் ஒருவர் உதவிப் பொலிஸ் அதிபரின் தரத்துக்கு மேற்பட்ட பொலிஸ் அதிகாரி ஒருவரிடம் ஒப்புதல் வாக்குமூலம் அளிக்கு பட்சத்தில் அந்நபரை இரண்டு, மூன்று ஆண்டுகளுக்கு தடுத்து வைத்திருக்கத்தக்கவிதத்தில் இச் சட்டம் கொண்டு வரப்படவிருப்பதாகவும் இதற்கான சட்டமூலம் விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவிருப்பதாகவும் அறிப் படுகிறது. (ம)

போர்முனையிலிருந்து முரண்பா ான செய்திகள்

# வியட்நாமிலிருந்து சீனப்படை வெளியேறுகின்றன! - பீக்கிங் செய்திகள்

## 6 சீனப் படைப்பிரிவுகள் லாங்சொன் விரைவு

### கடும்போர் என்றும் கூறுகிறது வியட்நாம்

பீக்கிங், மார்ச் 3

வியட்நாமில் ஊடுருவிய பகுதிகளிலிருந்து சீனப் படைகள் விலகி சீனாவை நோக்கிச் செல்ல ஆரம்பித்துள்ளன என்று பீக்கிங்கிலிருந்து வெளிவந்த ஜப்பானிய செய்தி ஸ்தாபன செய்திகள் தெரிவிக்கின்றன.

அதேவேளையில்' வியட்நாமுக்குள் 30 மைல் தொலைவில் ஊடுருவியுள்ள ஒன்றரை லட்சம் படைகளும் உடனடியாக வெளியேற முடியாது என்றும் அவை படிப்படியாகவே திருப்பி அழைக்கப்படும் என்றும் சீன தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேசமயம் வியட்நாம் தனது றிசேர்வ், தொண்டர் படைப்பிரிவுகள் யாவற்றையும் பெரும் போருக்கு ஆயத்தமாக சேவைக்கு அழைத்துள்ளது என்று ஹனோய் வானொலி அறிவித்துள்ளது.

சீனப்படைகள் போர் ஓய்வை கடைப்பிடிக்கின்றன என்றும் வியட்நாமிலிருந்து அப்படைகள் வெளியேறஆரம்பிக்கின்றன என்றும் பீக்கிங்கிலிருந்து வெளியான செய்திகளில் எதுவித உண்மையில்லை என்று ஹனோய் வானொலி அறிவித்துள்ளது.

சீனாவின் 6 படைப் பிரிவுகள் நூற்றுக்கணக்கான பீரங்கிகளுடனும் கவச வண்டிகளுடனும் லாங்சொன் நகரை நோக்கி விரைகின்றன என்றும் ஹனோய் வானொலி அறிவித்தது

வியட்நாமிலிருந்து சீனப் படைகள் விரைவில் வெளியேறும் என்று சீன வெளிநாட்டமைச்சர் திரு குவா குவா தெரிவித்துள்ளார்

சீனப்படைகளை வியட்நாமிலிருந்து வாபஸ்பெறுவது என்று தீர்மானிக்கப்பட்டுள்ள போதிலும் எப்போது வாபஸ் பெறுவது என்று இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை என்றும் அவர் தெரிவி தார்

சீனப்படைகள் முழுவதும் வெளியேறும்வரை முக்கிய நிலைகளில் சீனப்படைப் பிரிவுகள் கண்காணிப்பில் ஈடுபடும் என்றும் விக்கப்பட்டது,

### போர் ஓய்வு

இதேவேளையில் பலமுனைகளில் சீனப்படைகள் போர் ஓய்வைக் கடைப்பிடித்துவருகின்றன என்றும் ஜப்பானிய செய்தி ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

### வியட்நாம் மறுப்பு

வியட்நாமின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த 'லாங்சொன்' நகரை சீனத்துருப்புக்கள் நேற்று கைப்பற்றிவிட்டதாக சீனா அறிவித்துள்ள அதே வேளையில் "லாங்சொன்' நகர் இன்னமும் தம் வசமே உள்ளதாகவும் அங்கு கடும் சண்டை நடைபெற்று வருவதாகவும் ஹனோய் வானொலி அறிவித்துள்ளது

### நிபந்தனையின்றி வெளியேறினால் மட்டும் பேச்சு

இரு நாட்டு விவகாரங்களையும் தீர்த்து வைக்கும் பொருட்டு உடன் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்குமாறு சீனா அழைப்பு விடுத்தாலும் வியட்நாமிலிருந்து சகல சீனத் துருப்புக்களும் நிபந்தனையின்றி வெளியேறினால் மட்டுமே வியட்நாம் பேச்சுவார்த்தை நடத்த முன்வரும் என்று ஹனோய் வானொலி மீண்டும் தெரிவித்துள்ளது.

## 1,40,000 ஆசிரியர்களுக்கு சம்பள உயர்வு!

### ஜூன் மாதம் அமுலாகிறது

[கொழும்பு]

ஒரு லட்சத்து 40 ஆயிரம் ஆசிரியர்களுக்கு சம்பள உயர்வு வழங்க கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இச்சம்பள அதிகரிப்புத் திட்டம் இவ்வருடம் ஜூன் மாதம் அமுலுக்கு வருகிறது

புதிய அறிவித்தலின்படி நான்கு விதமான சம்பளத் திட்டத்தின்கீழ் சிறிய சம்பள அதிகரிப்பு ஆசிரியர்களுக்கு கிடைக்க இருக்கிறது. [இ]

## 'இராசு' தனித்து இயங்குவார்?



[கொழும்பு]

இலங்கையின் அரசியலில் இன்று அனைவரினதும் கவனத்தை ஈர்ந்துள்ள மட்டக்களப்பு முதலாவது எம். பி திரு செ இராசதுரை தமிழர் விடுதலைக் கூட்டணியிலிருந்து வெளியேற்றப்பட்டு, அல்லது இராஜினாமாச் செய்து புதிய கட்சி ஒன்றை ஆரம்பிப்பாரா?

அரசில் சேர்ந்து மாவட்ட அமைச்சர் பதவியை ஏற்பாரா?

இக்கேள்விகள் எழுப்பப்பட்டு ஹேஷ்யங்கள் பல கூறப்பட்டாலும், திரு, இராசதுரை பாராளுமன்றத்தில் தனித்து இயங்குவார் என்றே நம்பப்படுகிறது (ம)

## இராணுவத்தினர் கால்நடையாக ரோந்து

[யாழ்ப்பாணம்]

சங்கானை சித்தங்கேணி, பண்டத்தரிப்பு வீதிகளில் ஆயுதம்தாங்கிய இராணுவத்தினர் நேற்றுக்காலை கால்நடையாக ரோந்துசுற்றும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வாகனங்களை சோதனையிட்டனர், [இ]

# வவுனியா பொதுச்சபைக் கூட்டத்தில் முக்கிய முடிவு

## 'அமிர்' அறிவிப்பு

[யாழ்ப்பாணம்]

தமிழர் விடுதலைக் கூட்டணியின் பொதுச்சபை இம்மாதம் 10ம் திகதி வவுனியாவில்கூடும் போது முக்கியமாக பல திட்டங்கள் தீட்டப்படும் எனவே தமிழ்மக்கள் தீய சக்திகளின் வழிநடத்தலுக்கு உள்ளாகாமல் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு காத்து தக்கதருணத்தில் நாம் பிறப்பிக்கும் கட்டளைகளை ஏற்று சகலரும் ஒன்றிணைந்து எமது இலட்சியத்தை அடையப் பாடுபட வேண்டும்

இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலதிபரும் எதிர்க்கட்சித் தலைவருமான திரு அ அமிர்தலிங்கம் நேற்றுக் காலை தமிழர் விடுதலைக் கூட்டணிப் பணிமனையில் நடைபெற்ற மூலக்கிளை உத்தியாகத்தர் ஆய்வரங்கில் பேசும் போது குறிப்பிட்டார்.

ஆய்வரங்குக்கு நிர்வாகச் செயலாளரும், ஊர்காவற்றுறை எம் பியுமான பண்டிதர் கா பொ இரத்தினம் தலைமை தாங்கினார், கோப்பாய், நல்லூர், காங்கேசன்துறைத் தொகுதிகளைச் சேர்ந்த மூலக்கிளை தலைவர், பொருளாளர், செயலாளர்கள் ஆய்வரங்கில் கலந்துகொண்டனர்-

திரு அமிர்தலிங்கம் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது;-

''இன்று நாம் அரசோடு ஒன்றி வேகம்குறைந்துவிட்டோமென சில தீயசக்திகள் பிரசாரம் செய்துவருகின்றன. இச்சக்திகள் எமது இளைஞர்களை தமது வலையில் சிக்கவைத்து மறைமுக நாடகங்களை நடாத்துவதை நாம் அறிவோம். ஒருபுறத்தில் எமது ஒற்றுமையைச் சிதைத்து நம்மை பலவீனப்படுத்தி பிரித்தாள அரசு முனைகிறது. மறுபுறத்தில் எமது எல்லையில் முப்படைகளைக் குவித்து தமிழ் எல்லைப்பிரதேசத்தை ஆக்கிரமிக்க அரசு ஓயாது திட்டமிட்டுவருகிறது.

### இக்கட்டான நிலையில் நாம்

அரசியலில் நாம் இருள்சூழ்ந்த இக்கட்டான நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம், இளைஞரில் சிலர் நமது வேகம் காணாது என்று வேதனை படுகிறாகள், வேகமும விவேகமும ஒருங்கிணைந்து தக்கசமயத்தில் போர்க்களத்தில் இய

[6-ம் பக்கம் பார்க்க]

## வரி விளம்பரம்


### விற்பனைக்கு

கொழும்புத்துறை துண்டி வீதியிலுள்ள இரண்டு பரப்பும் 8 குளியுமான காணி விற்பனைக்குண்டு. நேரில் வரவும். விபரம்: 49, கண்டி வீதி, யாழ்ப்பாணம். 1819

EY 5450 சோமசெற் கார் நல்ல நிலைமையில் உள்ளது. விரும்புவோர் செ. நிமலன், 10, சட்டநாதர் வீதி, நல்லூர் என்ற முகவரிக்கு தொடர்பு கொள்ளவும். 1818

### பயிற்சி

மத்திய கிழக்கு நாடுகளில் கட்டிடவேலைகளுக்குத் தொழிலாளர் தேவை. Diploma in Building Technology பயிற்சி விரைவில் ஆரம்பமாகின்றது. National Institutes 57, பாங்சோல் வீதி, யாழ்ப்பாணம். 1792

வெல்டிங் (Electric Arc & Gas) இலெக்றிக் வயறிங், றேடியோ (Transistor), Auto Electricians Certificate, Diploma in Building Technology முதலிய பயிற்சிகள், வெளிநாட்டு முறையில்நடாத்தப்படும். ஆங்கிலமூம் முதலுதவிப் பயிற்சியும் இலவசம். National Institutes, 57, பாங்சோல் வீதி. யாழ்ப்பாணம். 1791

### பின்னுறுதிக் கட்டளை பற்றிய

### அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்.

யாழ்ப்பாணம் காங்கேசன் துறை வீதியைச் சேர்ந்த காலஞ் சென்ற குழந்தை கனகலிங்கம் பெண் கலாவதியின் மரணசாதனமற்ற சொத்தின் விடயத்தில்

மரணமெய்தியவர்

தம்பிமுத்து கைம்பெண் சரஸ்வதி 42/5 காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம் மனுதார்

மரணச்சொத்து) நியாயாதிக்கம்) இல. 3430

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணச்சொத்து வழக்கு மேலே பெயர்குறிப்பிடப்பட்டுள்ள இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும், 1979ம் ஆண்டு பங்குனி மாதம் 30ம் திகதியன்று முற்பகல் 10-00 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி, அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங் காட்டுமாறு, இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக் கட்டளைப்படி ஒப்பம்

பொ. பாக்கியநாதன்
பதிவாளர்.

1979ம் ஆண்டு மாசி மாதம் 19ம் திகதி

தயாரித்தது
த. சண்முகராசா,
மனுதாரின் பதிவுபெற்ற தரணி 1821

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**


“ஜி. ஜி. பொன்னம்பலம் போன்றோரின் ஆசியுடன்உருவான

# இயக்கம் சிதைவதற்கு இடமளிக்கக்கூடாது’

— ‘அமிர்’

[சுழிபுரம்]

நாம் இலட்சியவாதிகள் இதய சுத்தியோடு செயல்பட்டு வருகின்றோம். எமக்குள் எவ்வித உயர்வு தாழ்வும் இல்லை. ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்று வாழ்ந்து வரும் நாம் யாருக்கும் தீங்கு செய்யவோ ஏற்றத்தாழ்வு காட்டவோமாட்டோம். இந்த நாட்டில் தந்தை செல்வா காட்டிய பாதையில் முதிர்ந்த தலைவர்களான அமரர் ஜி. ஜி. போன்றவர்களின் ஆசியுடன் உருவாக்கப்பட்ட எமது இயக்கத்தை சிதையவிடாது காக்க வேண்டியது எங்கள் ஒவ்வொருவரது கடமையுமாகும். இன்று எம்மிடையே உள்ள இளைஞர்கள் சிலர் ஏதோ சக்திக்கு உள்பட்டுள்ளனர். இதனால் தடுமாற்றம் அடைகின்றனர். ஒருசில வாலிபர்களின் செயலால் நாம் சின்னாபின்னப்பட்டுவிடக்கூடாது யாவரும் ஒன்றுபட்டு எம்இனத்தைச் சுதந்திரமாக இந்த நாட்டில் வாழச்செய்யவேண்டும். தந்தை செல்வாவும் இதையே வலியுறுத்தி வந்தார்.’’

இவ்வாறு தொல்புரம்-மூளாய் செல்வா சன சமூக நிலையப் பொதுப்பணி மன்றத் திறப்பு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட எதிர்க்கட்சி முதல்வர் திரு. அ. அமிர்தலிங்கம் செல்வநாயகம் வீதியைத் திறந்துவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

புதிய கட்டிடத்தை வட்டுக்கோட்டை தொகுதி எம். பி. திரு. தா. திருநாவுக்கரசு திறந்துவைத்தார். திறப்பு விழா நடைபெறுவதற்கு முன்னர் திரு. அமிர்தலிங்கம் செல்வா வீதிவழியாக ஊர்வலமாக அழைத்துச்செல்லப்பட்டார். மழை பெய்துகொண்டிருந்தபோதிலும் மக்கள் வழி நெடுகிலும் பூரணகும்பம் வைத்து மாலை சூட்டி திரு. அமிர்தலிங்கத்தை அழைத்து வந்தனர். நிலையத் தலைவர் எஸ். சிவசற்குணநாதன் விழாவிற்குத் தலைமைவகித்தார்.

### படதியில் வந்த சாதி

யாழ்ப்பாணத் தொகுதி எம். பி. திரு. வெ. யோகஸ்வரன் பேசுகையில் கூறியதாவது: ‘‘எமக்குள் பாதியில் வந்த சாதியை ஒழிக்க வேண்டும். மறைந்த தலைவர் செல்வாவின் பெயரைத் தாங்கி இயங்கும் இச் செல்வா சன சமூக நிலையம் செல்வா காட்டிய வழியில் செயல்படவேண்டும். செல்வாவின் பெயரை வைத்ததன் நோக்கம் அதுவேயாகும். நாம் எமது தலைவர் அமிர்தலிங்கத்தின் கரத்தைப் பலப்படுத்த வேண்டும் உலக நாடுகளில் வாழும் எமது இளைஞர்கள் செய்யும் பிரசாரத்தால் ஈழத் தமிழர் நிலைமை யாவரும் நன்கு அறியக்கூடியதாகவுள்ளது ஒன்றுபட்டுச் செயல்பட்டால் நாம் இந்த நாட்டில் சிறப்போடு வாழலாம்

திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் பேசுகையில், எமது மறைந்த தலைவர் தந்தை செல்வா தொல்புரம் கிராமத்தைச் சேர்ந்தவர் தமது ஆரம்ப வாழ்வை மிகவும் எளிமையாகக் கொண்டிருந்தார் தொல்புரத்தில் இவரது நினைவாக ஓர் வீதி அமைவது சிறப்புடையதாகும் என்றார்

வட்டுக்கோட்டை எம் பி திரு தா திருநாவுக்கரசு பேசுகையில், எமது இளைஞர்கள் விசுவாசம், நேர்மை, கட்டுப்பாடுடையவர்களாக வாழ வேண்டும் என்றார் மற்றும் பலரும் பேசினர் [அ]

மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்திற்கு

# வவனியாவில் 3700 ஏக்கர் காணி வழங்குவதற்கு பலத்த ஆட்சேபம்

## வடபகுதி எம். பி. களுக்கு கடிதம்

[வவனியா[

வவனியா மாவட்டத்தில் மரமுந்திரிகைச் செய்கைக்கென ஒதுக்கப்பட்ட 4000 ஏக்கர் காணியில் அபிவிருத்தி செய்யப்படாத 3700 ஏக்கரை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்திற்கு வழங்குதென்ற தீர்மானத்திற்கு வவனியா மாவட்ட மரமுந்திரிகையாளர் சங்கம்பலத்தஆட்சேபம் தெரிவித்துள்ளது.

மரமுந்திரிகையாளர் சங்கச் செயலாளர் திரு. என். சண்முகநாதன், வடபகுதி எம். பிக்களுக்கு எழுதியுள்ள சடிதத்தில் இவ்விபரத்தைத் தெரிவித்துள்ளார்.

அக்கடிதத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

வவனியா மாவட்டத்திலுள்ள பிராமணாளன் குளத்திலுள்ள 4000 ஏக்கர் நிலம், அளந்து பிரிக்கப்பட்டு, மரமுந்திரிகை செய்கைக்கு ஒதுக்கப்பட்டது. மத்தியதரவகுப்பினருக்குவழங்குவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

இதில் 1500 ஏக்கர்நிலம்மட்டுமே, 10 ஏக்கர், 15 ஏக்கர் துண்டுகளாக வழங்கப்பட்டது. அரசு பல உதவிகளையும் கடன்களையும் வழங்குவதாக உறுதியளித்தது. கிணறுகள் வீதிகள் அமைத்துத்தரப்படுமென்றும் கூறப்பட்டது. ஏக்கருக்கு 600 வீதம், 4 வருடத்திற்கு மான்யம்வழங்கசிபார்சு செய்யப்பட்டுள்ளது. ஆனால் மரமுந்திரிகைகூட்டுத்தாபனத்திற்கு 6000 ரூபா செலவாகிறது. இதுபற்றி பல தடவை கூறியும் பலன்கிடைக்கவில்லை.

கடந்த மாதம் 20ம் தேதி வவனியா காமினி மகாவித்தியாலயத்தில் நடந்த கூட்டத்தில் வவனியா மாவட்ட மந்திரி, மரமுந்திரிகைக்கு வழங்கப்பட்டு, அபிவிருத்தி செய்யப்படாத சகல காணிகளும் ரத்துச்செய்யப்படும் என்று கூறியுள்ளார் மரமுந்திரிகையாளரின் கஷ்டங்கள் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை எமதுசங்க ஆட்சேபத்தையும் பொருட்படுத்தாமல் குறுகியகால அறிவித்தலில் இக் கூட்டம் கூட்டப்பட்டது

இதுவரை வழங்கப்படாத காணிகள் மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்படுமென்றும் கூறப்பட்டதுடன், அதற்கான நடவடிக்கையும் எடுக்கப்பட்டு வருகிறது மற்றக் காணிகளும், 3 மாதத்திற்குள் திருத்தப்படாவிடில், கூட்டுத்தாபனத்திற்கே வழங்கப்படும்

காணிகளை அளந்து பிரிப்பதற்கு 4 வருடங்களுக்கு மேல் எடுத்தது அளந்து பிரிக்கப்பட்ட காணிகளை கூட்டுத்தாபனத்திற்கு வழங்குவது முறையல்ல

வவனியா அரசாங்க அதிபருக்கு மரமுந்திரிகைக்கு காணி கோரி பலர் விண்ணப்பித்தும் காணி இல்லையென்றுகூறி நிராகரித்துவிட்டார்

இவ்விடயத்தையிட்டு உடன் நடவடிக்கை எடுத்து, அளந்து பிரிக்கப்பட்ட காணிகள், மரமுந்திரிகையாளருக்கு கிடைக்க வழிசெய்யவேண்டும். (ஏ)

### தரம்குறைந்த பாண் விற்பனை

[நெல்லியடி]

கரவெட்டி மேற்கு, மந்தி போன்ற பகுதிகளில் தரம் குறைந்த பாண்கள் விற்பனை செய்யப்படுவதாக பாவனையாளர்கள் கவலை தெரிவிக்கின்றார்கள். இப்பாண்களினால் சுகாதாரத்திற்கு கேடு நேரிடலாம் எனவும் மக்கள் அஞ்சுகின்றனர்.

இவ்விடயத்தில் உணவுக் கட்டுப்பாட்ட திகாரிகளும், சுகாதார இலாகாவினரும் கவனம் எடுத்து செயற்பட வேண்டுமென மக்கள் எதிர்பார்க்கின்றார்கள். (க)

‘டுவிஸ்ட்’ உலகசாதனை;

# யாழ்.ஜின்னா மைதானத்தில் 10-ம்தேதி மற்றொரு முயற்சி

## கொழும்பில் செனிவிரத்தின தொடர்ந்து நடனமாடுகிறார்

[யாழ்ப்பாணம்]

டுவிஸ்ட் நடனத்தில் புதிய உலக சாதனையொன்றை நிலைநாட்டுவதற்கு, யாழ்ப்பாணம் மூஸ்லிம் பகுதியை சேர்ந்த ஜனாப் பரீத் நஸீர் முயற்சியெடுத்துள்ளார்.

யாழ். ஜின்னா மைதானத்தில் அமைக்கப்பட்டுள்ள அலங்கார மேடையில் அவர் இம்மாதம் 10 ம் தேதிகாலை 6 மணிக்கு டுவிஸ்ட் நடன ஆட்டத்தைஆரம்பிக்கவிருக்கிறார்.

யாழ்ப்பாணம் எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன் இந்த உலக சாதனை நிகழ்ச்சியை ஆரம்பித்துவைத்து வைப்பார்.

தினமும், கலை நிகழ்ச்சிகள், விளையாட்டு நிகழ்ச்சிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது

இவருடன், சேர்ந்து டுவிஸ்ட் நடனமாடி உற்சாக மூட்டுவதற்கு பல இளைஞர்களும், சிறுவர்களும் முன்வந்துள்ளார்கள்.

ஜனாப் பரீத் தஸீர் இரவு பகலாக தொடர்ந்து 17ம் திகதி வரை டுவிஸ்ட் நடனமாடி, ஆழிக்குமரன் ஆனந்தன் டுவிஸ்ட் நடனத்தில் ஏற்படுத்திய உலக சாதனையை முறியடித்து புதிய சாதனையை நிலைநாட்ட திட்டமிட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் டுவிஸ்ட் நடனக்கமிட்டித்தலைவர் ஜனாப் எம் எஸ் அமானுல்லா, பொதுச்செயலாளர்கள் ஜனாப் எம் ஈ ஷாஹீல், ஜனாப் எஸ் எச் கமால், கமிட்டி உறுப்பினர் ஜனாப் யூ எம் ஐ ஷாஹில் ஹமீது ஆகியோர் இந்த நிகழ்ச்சிக்கான சகலஏற்பாடுகளையும் செய்துவருகின்றனர்

இதேசமயம் ஆழிக்குமரன் ஆனந்தனால் இவ்வருட ஆரம்பத்தில் நிலைநாட்டப்பட்ட 128 மணி 16 நிமிடநேர உலக சாதனையை முறியடித்து புதிய சாதனையை நிலைநாட்ட 19வயதான ரோகண செனிவிரத்தின என்ற சிங்கள இளைஞர், தொடர்ந்து டுவிஸ்ட் நடனமாடி வருகிறார்.

இவர் கடந்த வியாழக்கிழமை காலை 8-10 மணிக்கு ஆழிக்குமரன் ஆனந்தன் உலக சாதனையை நிலைநாட்டிய அதே மைதானமான காலிமுகத் திடலிலுள்ளவிசேடமேடையில் டுவிஸ்ட் நடனத்தை ஆரம்பித்தார். இவரை ஊக்குவிப்பதற்காக நண்பர்கள், உறவினர்கள் இவருடன் சேர்ந்து நடனமாடி வருகின்றனர்.

ஆழிக்குமரன் ஆனந்தன் நேற்றுவந்து இவருக்கு நேரில் வாழ்த்துத் தெரிவித்துவிட்டுச் சென்றார்.

உலக சாதனையை நிலைநாட்ட, இம்மாதம் 6ம் தேதி பிற்பகல் 4மணி 27 நிமிடம் வரை இவர் தொடர்ந்து டுவிஸ்ட் ஆடவேண்டும்.

[கொக்-க[

### இன்று அடிக்கல் நாட்டு விழா

[அரியாலை]

யாழ். அரியாலை மேற்கு காந்தி சனசமூக நிலையத்தின் வளர்ச்சிப் போக்கில் இடவசதி போதாமையை மனதில் கொண்டு மேல்மாடிக் கட்டிடம் ஒன்றினைக் கட்டுவதற்கான அடிக்கல் நாட்டு விழா இன்று திங்கள் காலை மேற்படி நிலையத் தலைவரும் ஆசிரியருமான திரு. பொன். தேவராஜா தலைமையில் ‘அரஸ்கோ’ அதிபர் திரு. இ. அரசரத்தினத்தினால் ஆரம்பித்துவைக்கப்படும்

நல்லூர்த்தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு மு சிவசிதம்பரம் இதற்கான 75 ஆயிரம் ரூபா டனத்தை யாழ் மாநகரசபை ஆணையாளர் திரு சிவஞானத்தின் ஒத்தாசையுடன் ஒதுக்கியுள்ளார்

விழாவை முன்னிட்டு இரவு கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும் [அ]

# மக்கள் கருத்து

## தமிழ் வானொலி நேயர் கவனத்திற்கு.....

வானொலி என்பது ஒரு பொழுது போக்குச் சாதனம் என்பதுதான் எல்லோரதும் கருத்து. ஆனால் அது மனிதனின் முன்னேற்றத்தில் பல பங்குகளை செய்கிறது இன்று நாங்கள் எங்கள் வானொலியை கேட்பதோடு வேறுவெளி நாட்டு ஒலிபரப்புக்களை கேட்க கடமைப்பட்டிருக்கிறோம் தமிழர்களாகிய நாங்கள் எமது மொழி, பண்பாடுகளில் வேறுபட்ட ஒரு தேசத்தில் தமிழ்மொழிக்கு இடம் கொடுத்து வானொலி மூலம் தமிழை ஒலிபரப்பும்போது நாம் பெருமைப்படவேண்டியவர்களாயுள்ளோம்.

இன்று பல நாடுகளில் தமிழை ஒலிபரப்புகிறார்கள். இதில் மாஸ்கோ வானொலி, பி பி ஸி. முதன்மை வகிக்கின்றனர். ஐரோப்பாவில் இருந்து தினசரிதமிழ் ஒலிரப்பு நடத்தும் நாடாக சோவியத் யூனியன் திகழ்கிறது. மாஸ்கோ வானொலி தினசரி அரைமணித்தியாலம் நடத்துகிறது. பி பி. ஸி வாரத்தில் சில தினங்களில் மாத்திரம் தமிழ் ஒலிபரப்பை நடாத்துகிறது. மற்றும் அகில இந்திய வானொலி, மலேஷிய வானொலி, வெரித்தாஸ் வானொலி, பீக்கிங் வானொலி ஆகியனவும் தமிழை ஒலிபரப்புகின்றன. மேற்கண்ட நாடுகள் தமிழில் அக்கறை காட்டித் தமிழழை ஒலிபரப்பும்போதும் தமிழர்களாகிய நாங்கள் சற்றுச் சிந்தித்து அவர்களுக்கு எப்படிப்பட்ட உதவி, ஊக்கம் அளிப்பது என்பது பற்றிச் சிந்திக்கவேண்டும். ஒவ்வொரு வானொலிக்கும் நேயர்மன்றம் அமைத்து, அவ்வவற்றிற்கு நேயர்களையும் சேர்த்து, வெறுப்பு, விருப்பங்களை அந்தந்த வானொலிகளுக்கு அனுப்பினால் என்ன நடவடிக்கை எடுக்கவேண்டுமோ அதை வானொலி சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனே எடுப்பார்கள். இதுதான் தமிழ்நேயர்கள் செய்யவேண்டிய கடமையாகும். இதனால் எங்கள் வானொலியை முற்றாக மறந்திடவேண்டும் என்று நான் ஒருபோதும் கூறவில்லை. வெளிநாடுகளில் தமிழை ஒலிபரப்பும் வானொலி நிலையங்களுக்கு உங்கள் ஆக்கபூர்வமான கோரிக்கைகளை விடுத்து உதவி செய்யுங்கள் என்பது தான் தமிழ்நேயர்களை நான் கேட்டுக் கொள்வதாகும்.

எஸ். ரி. நடனசிகாமணி

உறுப்பினர் மாஸ்கோ வானொலி நேயர்மன்றம்

செம்பாடு, உடுப்பிட்டி வடக்கு.

## கல்பகேயின் புள்ளி அடிப்படை தெரிவுதான் என்னே?

உயர் கல்வி அமைச்சுச் செயலாளர் திரு. ஸ்டான்லி கல்பகே "தரப்படுத்தல் அமுல் நடத்தப்படுவதாக விஷமப்பிரசாரம் செய்து மாணவர்களைப் பகிஷ்கரிப்புக்கு தூண்டிவருகின்றனர்" என்று பத்திரிகை மூலமாக அறிக்கை விடுத்துள்ளார்.

இவ்வருட பல்கலைக்கழக அனுமதி முற்றிலும் புள்ளி அடிப்படையிலேயே நடைபெறும் என்று திரு கல்பகே கூறும்போது உண்மையாகத் திறமை அடிப்படையிலேயே மாணவர் தெரிவு நடக்கும் என்பதான ஒரு தவலை வெளிப்படுத்துவதாக முதற்கண் தோன்றுகிறது. ஆனால் அது உண்மைக்கு முழுதும் மாறானதாகவேயிருக்கிறது. அவர் தமது அறிக்கையில் கூறியிருப்பதையே நாம் சற்று ஆராய்ந்து பார்ப்போம்.

'மருத்துவ பீடத்திற்கு 400 மாணவர்கள் தெரிவுசெய்யப்படுவார்கள். இவர்களில் 30 வீதமானோர் புள்ளி அடிப்படையில் அகில இலங்கை ரீதியில்தேர்ந்தெடுக்கப்படுவர்' என்கிறார் திரு கல்பகே இதிலிருந்து பெறப்படுவதென்ன? 30 வீதமானோர் மாத்திரம் திறமையடைப்படையில் தெரிவு செய்யப்படுவர் என்பதை அவர் உறுதிப்படுத்தியுள்ளார்!

"55 வீதமானோர் மாவட்ட அடிப்படையில் கூடுதல் புள்ளி எடுத்த மாணவர்களாகத் தெரிவு செய்யப்படுவார்கள். மீதமானோர் பின் தங்கிய மாவட்டங்களாகக் கணிக்கப்பட்ட திருமலை, முல்லைத்தீவு, மட்டக்களப்பு, மன்னார், நுவரெலியா, அம்பாறை, மொனராகலை ஆகிய மாவட்டங்களிலிருந்துகூடிய புள்ளியடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுவர்' என்று கல்பகே கூறியுள்ளார்.

எல்லோரையும் புள்ளி அடிப்படையில் தெரிவுசெய்வதென்றால் ஏன் மாவட்ட ரீதியில் தெரிவுசெய்யவேண்டும்? இரண்டு மாவட்டங்கள் மாத்திரம் பெரும்பாலும் தமிழர் வசிக்கும் பிரதேசங்கள். ஏனைய மாவட்டங்களெல்லாம் சிங்களவர் பெரும்பான்மையாக வசிக்கும் பிரதேசங்களாகும்.

[4-ம் பக்கம் பார்க்க]

## கவலைதரும் செய்தி

3-3-79 'ஈழநாடு' பத்திரிகையில் வெளிவந்த "மாணவர்கள் வெளியேற்றப்பட்டனர்" என்ற செய்தியை படித்து ஆச்சரியமடைந்தேன். கல்வி நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய கட்டணம் செலுத்தாத மாணவர்கள் வெளியேற்றப்படுவது தவிர்க்க முடியாததே. இம்மாணவர்களில் சிலர் தைமாதக் கட்டணம் கூட கட்டவில்லை அதனால்தான் நிறுவனம் இந்நடவடிக்கையை எடுத்தது அது தவிரவும், சட்டமாணவர்கள் நால்வர் இரண்டு வாரங்களுக்கு முன்னர் குடிவெறியில் நிறுவன மண்டபத்துள் காணப்பட்டதற்குக் காரணம் கேட்டு நிர்வாகியினால் எழுதப்பட்ட விளக்கக் கடிதத்திற்குப் பதில் தராமையலால் அவர்களை விலக்குவதற்கு நிறுவன முடிவு செய்தது. இதன் காரணமாகவே சட்டமாணவர்கள் மாதாந்தக்கட்டணத்தைச் செலுத்தாது ஒத்துழையாமை இயக்கத்தில் ஈடுபட்டார்கள் இது ஒரு தனியார் நிறுவனமாகையால் மாணவர்களது பணத்திலேயே விரிவுரையாளர்களது வேதனம் வழங்கப்படுகின்றது என்பதனையும், மாணவர்கள் கட்டணம் செலுத்த மறுக்கின்றபோது அவ்வகுப்புகளை ரத்துச் செய்வதைத்தவிர எதுவும் செய்யமுடியாது என்பனதையும் தெரிவிக்க விரும்புகிறேன் நிலைமை இவ்வாறிருக்க உண்மைக்குப் புறம்பான விதத்தில் செய்தி வெளியாகியிருந்தது, திரு வெ. யோகேஸ்வரன் எம். பி. கூட இதனைமறுத்திருக்கிறார், இச் செய்தியால் நாம் மன உளைச்சலும் வேதனையும் அடைந்துள்ளோம்.

சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் நிர்வாகி

யாழ்ப்பாணம்

---

கொழும்புத்துறை ஆசிரிய கலாசாலை

# தொடர்ந்து நடைபெற நடவடிக்கை எடுக்கவும்

## இ. த. ஆசிரியர் சங்கம் கோரிக்கை

[யாழ்ப்பாணம்]

கொழும்புத்துறை ஆசிரியர் பயிற்சிக்கலாசாலையை தொடர்ந்து நடாத்தபோதிய ஆசிரிய மாணவர்களை சேர்க்க நடவடிக்கை எடுக்குமாறு தமிழர் விடுதலைக் கூட்டணி செயலதிபரும் எதிர்க்கட்சித் தலைவருமான திரு அ அமிர்தலிங்கத்திடம் இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

தமிழர் விடுதலைக் கூட்டணி தலைமைச் செயலகத்தில் இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தைச் சேர்ந்த சுமார் 100 ஆசிரியர்கள் திரு. அமிர்தலிங்கத்தைச் சந்தித்தனர்.

வடபகுதியில் ஆசிரியர்களை அடிக்கடி இடமாற்றம் செய்வதால் மாணவரின் கல்வி பாதிக்கப்படுகிறது.

பாடசாலைப் பகிஷ்கரிப்பு காரணமாக பாதிப்படைந்த ஆசிரியர்களின் விசாரணையை துரிதப்படுத்த வேண்டும்.

பாடசாலைப் பகிஷ்கரிப்புக் காலத்தில் சமுகமளிக்காதவர்கள் சமர்ப்பித்த ஆயுள்வேத வைத்திய அத்தாட்சிப் பத்திரத்தை ஏற்கவேண்டும்.

கொழும்புத்துறை ஆசிரியர் கலாசாலை அதிபரை இடமாற்றவேண்டும். ஆகிய கோரிக்கைகளும் திரு. அமிர்தலிங்கத்திடம் ஆசிரியர் சங்கத்தால் சமர்ப்பிக்கப்பட்டது

இக்கோரிக்கைகள்பற்றி வடபிராந்திய கல்விப் பணிப்பாளர் மற்றும் ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகளுடன் பேசித் தீர்வுகாணும் பொருட்டு ஊர்காவற்றுறை எம் பி. பண்டிதர் கா. பொ இரத்தினத்தை திரு. அமிர்தலிங்கம் நியமித்துள்ளார். (கொ- ழு)

...

## இன்றைய இராசிப்பலன்

மாசி மாதம் 21-ம் திகதி திங்கட்கிழமை (5-3-79)

**மேடம்:-** தனிவழிப் பயணத்தைத் தவிர்க்கவும், விலை பொருள்களினால் பணம் விரயமாகும் உடற்சுகக்குறைவும் தென்படும்.

**இடபம்:-** அதிக முதலீட்டை பின்போடவும். அவப்பெயருக்குமிடமேற்படும், குறுக்கு வழிகளில் இறங்கவேண்டாம்.

**மிதுனம்:** வாக்கு வன்மையின் மூலம் காரியங்களைச் சாதிப்பீர்கள், மனை வாழ்வில் மகிழ்ச்சி தென்படும், கடமை புரியும் இடத்தில் சிறப்புண்டு.

**கடகம்:-** ஏமாற்றத்தின் தாக்குதல் மனதுக்கு வேதனை தரும், பூமிப் பிணக்குகளினால் கலகம் ஏற்படும், தொழில் புரியும் இடத்தில் சூழ்ச்சிகள் உருவாகும்.

**சிங்கம்:-** பயன்தரும் பிரயாணம் ஒன்று மேற்கொள்ளப்படும், வெளியிடத் தொடர்புகள் பெருகும், கல்வித் துறையிலும் முன்னேற்றம் உண்டு.

**கன்னி-:** கூட்டு வியாபாரத்தில் முன்னேற்றம் உண்டு, டாக்டர்களுக்குச் செல்வாக்குப் பெருகும், புத்திரர் பெருமையும் உண்டு, சுபநாள்.

**துலாம்:-** பகைமூட்டம் தோன்றும், வேதாந்த சிந்தனைகள் தலைதூக்கும், சிறிய விபத்துக்குமிடமேற்படும். நிதானம் நன்று.

**விருச்சிகம்:-** குடும்பத்தில் குதூகலம் தவழும், தொழிலிலும் முன்னேற்றம் தென்படும் களஸ்திரவழிப் பெருமைக்குமிடமுண்டு.

**தனுசு:-** மனத்தளர்ச்சி ஏற்படும், குடும்பத்தில் குறை கேட்க நேரிடும், சிலருக்கு விரக்தி மனப்பான்மையும் தென்படும், பொறுமை வேண்டும்.

**மகரம்:-** தக்க சமயத்தில் தந்தை ஆதரவு கிடைக்கும், குறிக்கோள் வெற்றியுண்டு, யாத்திரைப் பிரிவும் ஏற்படும், ஒளிமயமான நாள்

**கும்பம்:-** சிலருக்கு பொதுசனத் தலைமையும் கிடைக்கலாம், பொதுமக்களின் தொடர்புகள், பெருகும், சிலருக்கு இடமாற்றமும் ஏற்படும்.

**மீனம்:-** அதிர்ஷ்டகரமான தினம், தொழில் புரியும் இடத்தில் ஆதரவு பெருகும், அதிக வருவாய்க்கிடமுண்டு, கலைஞர்களுக்குப் பொன்னான தினம்.

சோதிடக் கலாநிதி

திரு. லை க. வேலுப்பிள்ளை

## தவக்கால நற்சிந்தனை

"மனுஷனுடைய நாட்கள் புல்லுக்கு ஒப்பாய் இருக்கிறது. வெளியின் புஷ்பத்தைப்போல் பூக்கிறான், காற்று அதன்மேல் வீசின உடனே அது இல்லாமற் போயிற்று. அது இருந்த இடமும் இனி அதை அறியாது."

(சங்கீதம்: 103, 15-16)

மரண துன்பத்தால் துயருறும் நேரத்திலே, ஐம்பொறிகளும் தம் புலனடங்க, அருகிலுள்ளோர் தம் மார்பிலடித்துச் சுற்றியழ, அவ்வவலத்தின் ஒலி நம் செவிகளுக்குத்தான் கேட்குமா? அத்தகைய நேரத்தில் நமக்குத் துணையாவார் யார்? திக்குத்திசை தெரியாமல் இருள்மண்டிய நேரத்திலும் கடவுளுடைய திருநாமத்தின் சக்தி நமக்குத் தெம்பு கொடுக்கிறது. நமது நிர்க்கதியான நிலையையும் துரத்திவிடுகிறது.

தொகுப்பு : வில்பிறெட்

## 23 ஆயிரம் ரூபா செலவில் புதியகட்டிடம்

[வண்ணார்பண்ணை]

23 ஆயிரம் ரூபா செலவில் கட்டிமுடிக்கப்பட்ட மண்டைதீவு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் கனிஷ்ட வித்தியாலய புதியகட்டிடத்தை ஊர்காவற்றுறை எம் பி பண்டிதர் கா பொ. இரத்தினம் திறந்துவைத்தார்

வேலணை வட்டார ஆசிரியர் சங்க செயலாளர் திரு பொ நடராசா தலைமையில் நடந்த இவ்விழாவில் ஆசிரியர் திரு பே கீதபொன்கலன் வித்தியாலய அதிபர் திரு செ. அ தேவராசா ஆகியோர் உட்பட பலர் உரையாற்றினர். [க]



## மிருதங்க தாளவாத்திய கச்சேரி

[யாழ்ப்பாணம்]

மிருதங்கவித்துவான் நாச்சிமார் கோயிலடி திரு. வே. அம்பலவாணரின் மிருதங்க தாளவாத்தியக் கச்சேரி இன்று இரவு 10-30 மணிக்கு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ் சேவை 1-ல் கேட்கலாம் ரி. ஜெசுந்தரம் கஞ்சிராவும், கே. கே. அச்சுதன் கடமும். வயலின் வித்துவான் பிரம்ஸ்ரீ எஸ் சோமஸ் கந்தசர்மா பல்லவியும் வாசிப்பார்கள்.

...

## சட்டத்தரணிகள் சங்கம்

(யாழ்ப்பாணம்)

சட்டத்தரணிகள் சங்கத்தின் சாவகச்சேரிக் கிளையின் வருடாந்தப் பொதுக்கூட்டம் சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றக் கட்டிடத்தில் நடைபெற்றபோது நடப்பு ஆண்டிற்கால உத்தியோகத்தர்கள் தெரிவுசெய்யப்பட்டனர். விபரம் வருமாறு: தலைவர்- திரு. எஸ் கே. திரவியநாயகம், ஜே பி, யூ எம், செயலாளர்: திரு சி. பொ. மயில்வாகனன், பொருளாளர்: திரு சு. கந்தசாமி, ஜே. பி யூ. எம் தாய்ச் சங்கப் பிரதிநிதிகள்- திரு வி. எஸ். சுந்தரலிங்கம், திரு செ. அபிகைபாலன் அனைவரும் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டனர் [அ]

மரக்கறி தேவை
ஒரு அங்குலமும், அதற்கு மேற்படவும்
கொழும்பில் விநியோகம் செய்ய தொடர்புகொள்க.
T. A. J. நூர்பாய் அன் கோ. லிமிட்.
அவுஸ்திரேலியா பில்டிங்
யோர்க் வீதி. கொழும்பு - 1.

# "கூட்டுச்சேராக் கொள்கையை கியூபா முற்றுகப் பின்பற்றவில்லை"

## பிரிட்டிஷ் துணை அமைச்சர் கருத்து

(கொழும்பு)

கூட்டுச்சேரா நாடுகளின் தலைமையை அடுத்து ஏற்கப் போகும் கியூபா, முழுமையாக கூட்டுச்சேராக்கொள்கையைக் கொண்ட ஒரு நாடல்ல; அது சோவியத்யூனியனுடன் கூட்டுச் சேர்ந்திருக்கிறது. இது பற்றி நான் இலங்கை வெளிநாட்டமைச்சர் ஜனப் ஹமீட்டுடன் பேச்சுவார்த்தை நடாத்தினேன்.

பிரிட்டிஷ் அரசின் வெளிவிவகார பொதுநல அலுவல்கள் பிரதிஅமைச்சர் திரு இவான் லூவாட் கடந்த வெள்ளியன்று கொழும்பில் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில்இவ்வாறுதெரிவித்தார்.

சர்வதேச விவகாரங்கள் தொடர்பாக பிரிட்டன், இலங்கை, அரசாங்கங்கள் கொண்டுள்ள கருத்துக்களில் வேறுபாடுகள் இல்லையென்பதையும் ஜனப் ஹமீட்டுடனை பேச்சுவார்த்தைகளிலிருந்து தாம் அறிந்து கொண்டதாகவும் திரு; லுவாட் தெரிவித்தார்.

### இந்திய அரசியல்

இந்திய அரசியல் பற்றிக் குறிப்பிடுகையில், ஜனதா ஆட்சியில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் திருமதி இந்திராகாந்திக்கு ஆதரவைஏற்படுத்துவதாகவே இருந்தாலும், திருமதி இந்திரா மீதான கமிஷன் விசாரணைகளும், அவரின் புதல்வர் சஞ்சய் காந்தி தொடர்பான விவகாரங்களும் திருமதி இந்திராவின் எதிர்கால அரசியல் நிலைபற்றி உறுதியான கருத்து எதனையும் தெரிவிக்கமுடியாத நிலையை ஏற்படுத்தியிருப்பதாக திரு. லுவாட் கூறினர்.

### பூட்டோ விவகாரம்

ஜனுப் பூட்டோவுக்கு மரண விசாரணையினின்றும் மன்னிப்பளிக்கப்படும் பட்சத்தில்அவர் பிரிட்டனில் குடியேற விரும்பினுல் அது பற்றி பிரிட்டிஷ் அரசு கவனமாக ஆலோசிக்குமென்றும் அவர் மேலும் கூறினர். [ம]

---

## சென். பற்றிக்ஸ் இன்னிங்ஸால் வெற்றி

[யாழ்ப்பாணம்]

சென் பற்றிக்ஸ்கல்லூரிக்கும் பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரிக்குமிடையேநடைபெற்ற கிரிக்கட போட்டியில் சென்பற்றிக்ஸ் கல்லூரி இன்னிங்ஸ் வித்தியாசத்தால் வெற்றிபெற்றது

முதலில் ஆடிய ஹாட்லிக்கல்லூரி முதல் இன்னிங்ஸில் 128 ஓட்டங்களைப் பெற்றது. எஸ். சிவயாலரத்தினம் 46 ஓட்டங்களைப் பெற்ருர். துரைசிங்கம் 42 ஓட்டங்களுக்கு 4 விக்கட்டுகளையும், எம். அமலநாதன் 23 ஓட்டங்களுக்கு 4 விக்கட்டுகளையும் கைப்பற்றினர்.

சென் பற்றிக்ஸ் கல்லூரி முதல் இன்னிங்ஸில் 8 விக்கட் நஷ்டத்திற்கு 276 ஓட்டங்களைப் பெற்றது. சகாயராஜா 70 ஓட்டங்களையும், துரைசிங்கம் 55 ஓட்டங்களையும், ரவிராஜ் 38 ஓட்டங்களையும் பெற்றனர். கதிரவேல் 36 ஓட்டங்களுக்கு 3 விக்கட்டுகளைக் கைப்பற்றினர்.

ஹாட்லிக்கல்லூரி 2ம் இன்னிங்ஸில் 101 ஓட்டங்களைப் பெற்றது. ரவிராஜ் 8 ஓட்டங்களில் 4 விக்கட்டுகளையும் எம் எஸ் அல்பிரெட் 23 ஓட்டங்களுக்கு 4 விக்கட்டுகளையும் கைப்பற்றினர். [கொக்-நி]

---

## ரயிலில் மோதுண்டு மரணம்

(சாவகச்சேரி)

அக்கரைப்பற்றைச் சேர்ந்த ஜோசியர் ஒருவர் சாவகச்சேரியிலுள்ள கடவை ஒன்றில் ரயிலால் மோதுண்டு ஸ்தலத்திலேயே மரணமானுர்,

இராமசாமி கொச்சி [வயது 55] என்ற அந்த நபர் சாவகச்சேரிக்கும் சங்கத்தானைக்கும் இடையிலுள்ள பாதுகாப்பற்ற ரயில் கடவையிதலயே நேற்று ரயிலால் மோதுண்டு பலியானுர்.

காலஞ்சென்றவர் சாவகச்சேரி கச்சாய்வீதியில் உள்ள வீடொன்றில் தற்காலிகமாகத் தங்கியிருந்தாராம்.

சாவகச்சேரி நீதவான் திரு. கே. பாலகிட்ணர் மரணவிசாரணை நடத்திஞர். சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சடலம் வைக்கப்பட்டுள்ளது. [இ]

---

## மின்பாவனையாளர் குறைபாடுகள்

[புலோலி]

பருத்தித்துறை நகரசபை எல்லைக்குள் உள்ள மின்பாவனையாளர்களின் குறைபாடுகள் விரைவில் நீக்கப்படவுள்ளன.

இப்பகுதிகளில் உள்ள மின்பாவனையாளர்களின் நீண்டகாலக் குறைபாடுகளை யாழ் மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு அன்ரன் அல்பிரட், பருத்தித்துறை எம். பி. திரு. கே துரைரத்தினம் ஆகியோரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதனையடுத்து இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (க)

---

## திறந்தபடியே தபால் பெட்டி

[சாவகச்சேரி]

கச்சாய் வடக்கு சதாசிவ வாசிகசாலை வளவினிலுள்ளிருக்கும் தபால் பெட்டி எந்நேரமும் திறந்த நிலையிலுள்ளது. இதனுல் அப்பகுதி மக்கள் கொடிகாமம் தபால் நிலையத்திற்கு வந்தே தங்கள் தபால்களைப் போடவேண்டிய நிர்ப்பந்த நிலை உருவாகியுள்ளது. [இ]

---

ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம்

## காலவரையறையின்றி மூடப்பட்டது

[கொழும்பு]

ஸ்ரீ ஜயவர்த்தனபுரபல்கலைக்கழகம் காலவரையறையின்றி மூடப்பட்டிருக்கிறது.

கடந்த வெள்ளியன்றுமூடப்பட்ட இப்பல்கலைக்கழகத்திலிருந்து மாணவர்களனைவரும் வெளியேறும்படி கேட்கப்பட்டிருக்கிருர்கள்.

கடந்த வியாழன் இரவு நடைபெற்ற படக்காட்சியொன்றுக்குப் பிக்கு மாணவர் சிலர் வேறு பிக்குகளையும் அழைத்துவந்ததைத் தடுத்ததையடுத்து மாணவர் கிளர்ச்சியில் ஈடுபட்டதாலேயே பல்கலைக் கழகம்மூடப்பட்டதாகக் கூறப்படுகிறது.

உபவேந்தரை அன்று இரவு முழுவதும் அவரது அறையில் மாணவர்கள் மறியல்வைத்திருந்தார்களென்றும் சுமார் 50 ஆயிரம் ரூபா வரையிலான சேதம் விளைக்கப்பட்டிருப்பதுடன், உபவேந்தரின் காரும் சேதப்படுத்தப்பட்டிருப்பதாகவும் அறியப்படுகிறது. [ம-அ]

---

## பொலிகண்டியில் திருட்டு அதிகரிப்பு

(புலோலி)

பொலிகண்டிப் பகுதியில் தினமும் இரவு வேளைகளில் திருட்டுக்கள் இடம்பெற்று வருவதனுல் பொதுமக்கள் பீதியடைந்துள்ளனர்.

இங்குள்ள வீடுகளில்திருடர்கள் இரவுதோறும் தமது கைவரிசையைக்காட்டிவருகின்றனர். வீடுகளில் புகும்திருடர்கள் அகப்பட்டவற்றை எடுத்துக் கொண்டு செல்கின்றனராம். [க]

---

## "பிரச்னைகளை தொழிலாளர் அமைப்புகளே தட்டிக் கழிக்கின்றன"

[நெல்லியடி]

இலங்கைத் தொழிலாளரின் பிரச்சினைகளைத் தீர்க்கவேண்டிய கடமையிலிருந்து, இலங்கையின் இடதுசாரிகள் தவறிவிட்டார்கள். தொழிலாளர்களுக்காக உருவாக்கப்பட்ட அமைப்புக்களே, தொழிலாளரின் பிரச்னைகளைத் தட்டிக்கழித்ததுடன், காலத்தையும் வீணடித்தது கவலைப்படக்கூடியது.

லங்கா சமசமாஜக்கட்சியின் புதிய தலைமையின் தொழிற்சங்கவாதியான திரு. வில்பட் பெரேரா, வல்வெட்டித்துறை, பருத்தித்துறை ஆகிய நகர சபைகளின் மின்சார, நகர சுத்தித் தொழிலாளர் சங்கத்தினை அங்குரார்ப்பணம் செய்துவைத்து உரையாற்றுகையில் குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து கூறியதாவது:- லங்கா சமசமாஜக் கட்சியின் புதிய தலைமையின் கீழ் புரட்சிகர சக்திகள் ஒன்றிணைந்து வருகின்றன. தொழிலாளி வர்க்கத்தின் நலனுக்காகவும் சுதந்திரத்திற்காகவும் தீவிர போராட்டங்களை நடாத்தவேண்டியுள்ளது.

இத்தகைய போராட்டங்களை நடாத்த தொழிலாளர் ஒன்றுபட்டு வருகிருர்கள். பழைய இடதுசாரிகள்தம்மை நட்டாற்றில் கைவிட்டுவிட்டதைதொழிலாளர்கள் சரிவர உணர்ந்து கொண்டுவிட்டார்கள். [க]

---

## கல்பகேயின்...

[3ம் பக்கத் தொடர்ச்சி

55 வீதமாக மாவட்டங்கள் தோறும் தெரிவுசெய்வதென்ருல் உண்மையிலேயே இனவிகிதாசாரபடியே தெரிவுநடக்கும். அதுதான் அரசினரின் திட்டமென்பது வெளிப்படை இப்படியாஞல் திறமைக்கு எங்கே இடம்? அரசாங்கமே இதற்குவிடை பகரட்டும்!

திரு. கல்பகே செட்டித்தனமாக எல்லாவிதமான தெரிவுக்கும் புள்ளியடிப்படையில் என்று சேர்த்துக்கொள்கிருர். இந்தத்தந்திரம் வெட்ட வெளிச்சமாகத் தென்படுகிறது புள்ளியடிபபடையென்று கூறி மக்களுக்கு மயக்கத்தை உண்டு பண்ணுகிருர்! இத்தெரிவுகள் பாகுபாட்டையே நிலைநாட்டுகின்றன. விஷமப்பிரசாரஞ் செய்வது யார் என்று மக்களே சொல்லட்டுமே.

தரபபடுத்தல் என்னும் பதத்தை தற்போதைய அரசு விட்டுவிட்டதாகக் கூறலாம் ஆனுல் இந்த அரசு பல்கலைக் கழகத் தெரிவுக்குக் கையாளும் மாவட்ட முதலாயத் தெரிவு முறைகள தமிழ் மாணவர்களுககு இன்றும் குறைந்த ஸ்தானங்களையே கொடுப்பதாக அமைகிறது சென்ற அரசுதரப்படுத்தல் முறையைக் கொண்டுவந்ததின் பிரதான நோக்கம் திறமைவாய்ந்த தமிழ் மாணவர்களை ஒதுக்குவதற்கே. ஆனுல் இந்த அரசு கையாளும் முறைகளோ தமிழ் மாணவர்களை இன்னும் மோசமானமுறையில் ஒதுக்குவதாக உள்ளன.

சி. பொன்னையா.
(சட்டத்தரணி)
(செயலாளர், யாழ்.
பெற்ருேர் சங்கம்)

---

## "ஆசிரியனும் ஓர் உழவனே"

[யாழ்ப்பாணம்]

"உழவன் தன் நிலத்தைத் திருத்திப் பண்படுத்தி நல்ல விதைகளை விதைக்கிருன். நெற்றிவியர்வை நிலத்தில் சிந்த உழைக்கும் உழவன் அறுவடையின்போது நல்லபொலி கண்டு உளம்பூரிக்கின்ருன். அவனது உளநிலைதான் ஆசிரியனுக்கும் தாம் கற்பிக்கும் மாணவர் நல்ல சித்தியைப் பெறுவது கண்டு மனம் பூரிக்கின்ருன் ஆசிரியன். சமீபத்தில் வெளியான ஜி. ஸி. ஈ. சாதாரண பரீட்சைப் பெறுபேற்றின்படி ஐந்து விசேட சித்தியும் மூன்று திறமைச் சித்தியும் பெற்ற உரும்பராய் சைவததமிழ் வித்தியாசாலை மாணவி பாராட்டுக்குரியவர். இம்மாணவி சென்ற ஆண்டு விவேகானந்தசபைப் பரீட்சைக்குத் தோற்றி முதன்மையாகச் சித்தியடைந்து தங்கப் பதக்கம் பெற்றதின் மூலம் தமது பாடசாலைக்குப் பெருமை தேடித்தந்துள்ளார்" என்று உரும்பராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தில் நடைபெற்ற முருக பிரார்த்தனைக்குத் தலைதாங்கிப் பேசிய வித்தியாலயத்தின் பிரதி அதிபர் திரு. அ. பஞ்சாட்சரம் குறிப்பிட்டார்,

"சைவத்தமிழ் வித்தியாலயம் சகல வசதிகளோடும் கூடிய பெரிய மகாவித்தியாலயமாய் இராது ஒரு கனிஷ்ட வித்தியாலயமாய் அமைந்த போதிலும் குறித்த ஜீ. ஸி. ஈ. சாதாரணபரீட்சையில் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் உட்பட பலபாடங்களிலும் அதிகமான மாணதர்கள் சிறப்பாகப் பூரணசித்தியடைந்திருப்பது பெற்ருேர்களையும் மாணவர்களையும் ஆசிரியர்களையும் உளங்குளிரச் செய்துவிட்டது என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஆசிரியை சங்கீதபூஷணம் திருமதி க இரசேந்திரம் பேசுயில் பொன்னும் மெய்ப் பொருளும் தருபவன் இறைவன் அவன்புகழைப் பேசுவதும் பாடுவதுமே நாம் செய்யும் புண்ணியம், அதுவே வாழ்க்கையின் முக்கிய குறிக்கோளாயமைவேண்டும்'' என்ருர்.

---

## புலமைப்பரிசிலில் வெளிநாடுபயணம்

[வண்ணூர்பண்ணை]

யாழ்ப்பாணத்திலும், கொழும்பிலும் இடம்பெற்ற சித்திரக் கண்காட்சிகளில் பரிசில்பெற்ற சித்திரக் கலைஞர் திரு. கந்தையா சந்திரதாஸ் அரச புலமைப்பரிசில் பெற்று வெளிநாட்டில் பயிற்சிபெறவுள்ளார்.

இவர் வெளிநாட்டில் சித்திரப்பயிற்சி பெறுவதற்கான ஏற்பாடுகளை கலாச்சார அமைச்சு செய்துள்ளது.

புலன் இழந்தவரான இவர் வேலணையைப் பிறப்பிடமாகக் கொண்டவராகும். வாய் பேசமுடியாத இவரது சித்திரங்கள் இலங்கையின் பலபொருட்காட்சிகளில் இடம் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. [க]

---

## பதவி உயர்வு

[கோண்டாவில்]

யாழ்ப்பாணம் வடக்கு கட்டிடப் பகுதி திணைக்களத்தில் பொறியியலாளராக கடமையாற்றிய திரு. இராசசூரியர் மாவட்டப் பொறியியலாளராக வவனியாவுக்கு பதவி உயர்வுபெற்றுச் சென்றுள்ளார்.

இவர் பதவிஉயர்வு பெற்றுச் செல்வதைப் பாராட்டுமுகமாக மாவட்டப் பொறியியலாளர் திரு. செல்லத்துரை தலைமையில் யாழ்ப்பாணம் வடக்கு கட்டிடத்திணைக்கள ஊழியர்களினுல் தேநீர்விருந்துபசாரம் நடாத்தப்பட்டது. [க]

---

## அடிக்கல் நாட்டு விழா

[புங்குடுதீவு]

இருப்பிட்டி சனசமூக நிலையத்திற்கான அடிக்கல் நாட்டு விழா நேற்றுக் காலை நடைபெற்றது.

புங்குடுதீவு மேற்கிலுள்ள வீரபத்திர ஆலய முன்றலில், புதிய கட்டடத்திற்கான அடிக்கல்லை வர்த்தகர் திரு. க. கோபாலபிள்ளை நாட்டினுர். [கே-க]

---

கிளிநொச்சி

## காணிப்பதிவு கந்தோருக்கு இராணுவ பாதுகாப்பு!

[ஆனையிறவு]

திருகோணமலை காணிப்பதிவு அலுவலகம் தீக்கிரையாக்கப்பட்டதைத் தொடர்ந்து கிளிநொச்சிக் காணிப்பதிவு அலுவலகத்திற்கு இராணுவக்காவல் ஏற்படுத்தப்பட்டுள்ளது,

இக்காணிப்பதிவு அலுவலகத்தைக் காவல்காக்கும் இராணுவ வீரர்கள் அருகில் உள்ள அரசாங்க பொதுச்சேவை தொழிலாளர் சங்க அலுவலக மண்டபத்தில் தங்கியிருப்பதற்கு அரசாங்க பொதுச்சேவை தொழிளாளர் சங்கத்தினர் ஆட்சேபம் தெரிவித்துள்ளனர்.

இதுவிடயம் சம்பந்தமாக இச்சங்கப் பிரதிநிதிகள் யாழ், மாவட்ட அரசாங்க அதிபர் திரு லயனல் பெர்ணண்டோவைச்சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

(புலோ. நி)

வெலிலி
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
ரஜனிகாந்த்—ஸ்ரீதேவி
மூன்றுமுடிச்சு

நாகம்ஸ்
(சுன்னாகம்)
தினசரி 6-45, 10-00
சனி, ஞாயிறு 2-45
ரவிச்சந்திரன்-விஜயா
ஜானகிசபதம்

Rio (Jaffna)
Phone: 7607
Daily 4 Shows
Killers are Challenged
(Also news-visit of Indian Prime Minister)

## புதிய பஸ் சேவை

[பண்டத்தரிப்பு]

யாழ். நகரிலிருந்து மானிப்பாய், கட்டுடை, கல்வளை, மாகியப்பிட்டி, அளவெட்டி, தெல்லிப்பழை ஆகிய இடங்களுக்கு ஊடாக காங்கேசன்துறை சென்றடையும் புதிய பஸ் சேவை ஒன்று சென்ற புதன்கிழமை தொடக்கம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. எதிர்க்கட்சித் தலைவரும் காங்கேசன்துறை எம். பியுமான திரு. அ. அமிர்தலிங்கம், மானிப்பாய்த் தொகுதி எம். பி. திரு. வி. தர்மலிங்கம் ஆகியோர் போக்குவரத்து அமைச்சுடன் தொடர்பு கொண்டு இப் புதிய பஸ் சேவையை ஒழுங்கு செய்துதருமாறு கேட்டுக்கொண்டதை அடுத்து இப் பஸ் சேவையை வடபிராந்திய இ. போ. சபை ஆரம்பித்துள்ளது. [ஈ]

ராஜா
(யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
எம்.ஜி.ஆர்.-ஜெயலலிதா நடித்த
தனிப்பிறவி
[புதிய பிரதி]

மனோகரா
(யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - உஷாநந்தினி
ராஜபார்ட் ரங்கதுரை
(ஈஸ்ட்மன் கலர்) [புதிய பிரதி]

10-வது வாரம்
வின்ஸர்
(யாழ்ப்பாணம்)
போன்: 466
தினசரி 5 காட்சிகள்
10-00, 1-00, 3-45, 6-45, 9-45
பைலட் பிரேம்நாத்
(ஈஸ்ட்மன் கலர்)

ராணி
(யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
முத்துராமன்-பிரமிளா
ஜெய்சித்ரா-ராகவன்
வாழையடிவாழை

ஸ்ரீதர்
(யாழ்நகர்) தினசரி 10-30, 2-15, 615&9-45
சிவாஜி-வரலட்சுமி
நான் பெற்ற செல்வம்

REGAL (Jaffna)
NOW SHOWING
Daily at, 4-30, 7-00 & 9-30 p. m.
ANNA CALDER in
Wuthering Heights
(Color-Adults)

Shanthi (Jaffna Phone- 7642)
4Th AND FINAL WEEK!
10-30, 2-30, 4-45, 7-00 & 9-30
More Suitable for Adults — Eastman Color
SEVEN NIGHTS IN JAPAN
Only For Another
SEVEN DAYS IN JAFFNA
Absolutely your last chance to see this simply and tenderly told Love Story of A Visiting Prince Charming for A Tour Guide of A Japanese Girl. School-Please contact the Management-for Special Arrangements

வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
தினசரி: 2-00, 6-00&9-30
சனி, ஞாயிறு: 10-00, 2-00, 6-00 & 9-30
கமலஹாசன் — சுஜாதா
அவள் ஒரு தொடர்கதை
(புதிய பிரதி)

லிடோ
(யாழ். நகர்)
போன்: 7638
தினசரி 4காட்சிகள்
விஜயகுமார் - ஸ்ரீவித்யா - தங்கவேலு
ஆசை அறுபதுநாள்

## சிலைகள்நிறுவ முயற்சி

[சித்தன்கேணி]

கலைநகர் நேருஜி கிராம முன்னேற்றச்சங்க சனசமுக நிலைய முன்றலில் அறிஞர் அண்ணாதுரையினதும் தந்தை செல்வநாயகத்தினதும் சிலைகளை அமைப்பதற்கு கலைநகர் இளைஞர்கள் நடவடிக்கை எடுத்துள்ளனர். (க)

## போட்டியின்றித் தெரிவு

[யாழ்ப்பாணம்]

வடமாகாண ஆசிரியர் சகாய நிதிச்சங்கத்திற்கு இவ் வருடமும் தலைவராக திரு. வ. மகாதேவனும், உப தலைவராக திரு. கே. வைரமுத்துவும், பொருளாளராக திரு. எஸ். சிவசுப்பிரமணியஐயரும் போட்டியின்றித் தெரிவாகினர்.

செயலாளராக திரு. ஆர். மகேந்திரனும், உப செயலாளராக திரு. எஸ். சிவராஜாவும் போட்டியிட்டு தெரிவாகினர். நிர்வாகசபைக்கு 23 பேர் போட்டியிட்டு 10 பேர் தெரிவாகினர். [கெ-க]

## 70,000 ரூபா ஒதுக்கீடு

[கோப்பாய்]

ஊரெழு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் கோரிக்கையின் பேரில் ஊரெழு கிராம அபிவிருத்திக்கென 79 ம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத்திட்டப் பணத்தில் 70,000 ரூபாயை கோப்பாய் பாராளுமன்ற உறுப்பினர் திரு. சி. கதிரவேலுப்பிள்ளை ஒதுக்கியுள்ளார். [க]

## சுந்தர் பாட ஆரம்பம் செய்துவைத்தார்

[யாழ்ப்பாணம்]

முன்னாள் வவுனியாபாராளுமன்ற உறுப்பினரும் அடங்காத்தமிழர் முன்னணித் தலைவருமான சி. சுந்தரலிங்கம் மாவிட்டபுரத்தில் சிறார்களுக்கு ஆரம்ப பாடபோதனை செய்து இனிப்பு வழங்கினார். மாவை ஆதீன குரு சண்முகநாதசர்மா தலைமையில் இந் நிகழ்ச்சி அண்மையில் நடைபெற்றது.

## இடமாற்றம்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் பிரதம தபாற்கந்தோரில் பிரதம தபாலதிபரின் பிரதமஇணைப்பு எழுதுவினைஞராகக் கடமையாற்றியதபாலதிபர் திரு. எஸ். நல்லநாதன் அம்பாறை பிரதம தபாற்கந்தோருக்கு பிரதம தபாலதிபராக இடமாற்றஞ் செய்யப்பட்டுள்ளார். இவரது சேவையைப் பாராட்டு முகமாக ஒரு பிரிவுபசார வைபவமும் நடைபெறவுள்ளது. [அ]

## தாக்கப்பட்டதாக புகார்

[சித்தன்கேணி]

வட்டுக்கிழக்கு பயிர்ச்செய்கை உத்தியோகத்தர் திரு. ந. சுப்பிரமணியம் வட்டுக்கிழக்கு தாவளைப்பகுதியில் காணி விசாரணைக்குச் சென்றபோது தாக்குதலுக்குள்ளானார். இவரிடம் காணிந்தகராறு காரணமாகமுறைப்பாடு செய்தவரே பயிர்ச்செய்கை உத்தியோகத்தரையும் எதிரியையும் தாக்கியதாகக்கூறப்படுகிறது.

பயிர்ச்செய்கை உத்தியோகத்தர் திரு. ந பாலசுப்பிரமணியம் இதுபற்றி சங்கானை பொலிசுக்கு முறைப்பாடு செய்துள்ளார். [க]

## சீனத்தாக்குதலை எதிர்த்து

# யாழ். முற்றவெளி பொதுக் கூட்டம்

## அமிரும் பேசுவர்

[யாழ்ப்பாணம்]

வியட்நாம் மீது சீனா மேற்கொண்ட தாக்குதலைக்கண்டித்து எதிர்வரும் 8-ம் திகதி வியாழக்கிழமை யாழ். முற்றவெளியில் பொதுக்கூட்டமொன்று நடைபெறவிருக்கின்றது.

மாஸ்கோ சார்பு கம்யூனிஸ்ட் கட்சியான யாழ். கிளைச் செயலாளர் திரு. ஏ. வைத்திலிங்கம் தலைமையில் நடைபெறவிருக்கும் இக்கூட்டத்தில் எதிர்க்கட்சித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம், மானிப்பாய் தொகுதி எம். பி. திரு. வி. தர்மலிங்கம் ஆகியவர்களுடன் கொழும்பிலிருந்து பேராசிரியர் லெஸ்லி குணவர்த்தனா மற்றும் திருவாளர்கள் பொன் குமாரசாமி எம். ஸி. சுப்பிரமணியம் ஆகியோரும் உரை நிகழ்த்துவர்.

கூட்டம் நடத்துவதற்கான அனுமதி பெறுவதற்கு கம். கட்சி வடபிராந்தியக் கிளையினர் பொலிசாருடன் தொடர்புகொண்டுள்ளனர்.

# வடமராட்சி மாணவர்மீது இடதுசாரிகள் கண்ணோட்டம்

[நெல்லியடி]

கல்லூரி மாணவர்களைத் தம் பக்கம் இழுத்தெடுப்பதில் இடதுசாரிக்கட்சிகள் வடமராட்சிப்பகுதிகளில் தீவிரம் காட்டி வருகின்றார்கள்.

முக்கிய பஸ்தரிப்பு நிலையங்களில் இவர்கள் தமது பிரச்சாரத்தை மாணவர்கள் மத்தியில் நடத்திவருகின்றனர்.

மக்கள் விடுதலை முன்னணிப் பிரமுகர்களும், புரட்சிக் கம்யூனிஸ்ட்கட்சியின் பிரமுகர்களும் ஒரே சமயத்தில் நெல்லியடி பஸ்தரிப்பு நிலையத்தில் தமது பிரச்சாரங்களை நடாத்தினார்கள்.

மாணவர்கள் அவர்களின் கருத்துக்களை அவதானித்ததைக் காணக்கூடியதாகவிருந்தது. [க]

# நோயின் கொடுமையால் வயோதிபர் தற்கொலை!

[நெல்லியடி]

நோயின் கொடுமை தாங்க முடியாமல் வயோதிபரொருவர் நச்சுத்திராவகம் அருந்தி தற்கொலை செய்த சம்பவமொன்று அச்சுவேலி வடக்கில் நடைபெற்றுள்ளது.

சி. செல்லப்பா என்பவரே நோயினை பொறுக்கமுடியாமல் கிருமிநாசினியை நாடி உயிரைப்போக்கிக் கொண்டவராவர்.

வீட்டில் கடைவைத்து வர்த்தகம் செய்து வந்த இவர் கிருமிநாசினி அருந்தியதும் மந்திகை அரசினர் வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு மரணமானார்.

வடமராட்சி திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. எம். வி. புவனேந்திரன் விசாரணை நடத்தியபின் தற்கொலை எனத் தீர்ப்பளித்தார். [க]

## நெல்லியடியில் சுலோகங்கள்

[நெல்லியடி]

நெல்லியடி மத்திய பஸ் தரிப்பு நிலையத்தில் அரசியல் சுலோகங்கள் பல எழுதப்பட்டுள்ளன. பஸ்தரிப்பு நிலையத்தை கேலிசெய்தும் தமிழீழக் கோரிக்கையை கண்டித்தும் தகாத வார்த்தைகளாலும் இச் சுலோகங்கள் எழுதப்பட்டுள்ளன.

சிவராத்திரி தினத்தன்று இரவு வேளையில் இச்சுலோகங்கள் எழுதப்பட்டதாக தெரியவருகின்றது. [க]

## வீதிகளை பார்வையிட்டனர்

[நெல்லியடி]

குடத்தனை நாகர்கோவில் வெற்றிலைக்கேணி போன்ற வடமராட்சிப் பகுதியிலுள்ள நெடுஞ்சாலைகள் அமைச்சிற்குரிய வீதிகளை; பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினமும், பளையிலுள்ள நெடுஞ்சாலைகள் அமைச்சின் நிறைவேற்றுப் பொறியியலாளர் திரு. வீ. ஜெயரத்தினமும் சென்று பார்வையிட்டார்கள். [க]

## ஆஸ்பத்திரியில் இருவர் அனுமதி

[நெல்லியடி]

கரவெட்டி கிழக்கு யார்க்கருவைச் சேர்ந்த திரு. வா. கணேஷ், செ. குகதாஸ் ஆகியோர் தாக்குதல் சம்பமொன்றில் பலத்த காயமடைந்து மந்திகை அரசினர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பாக பருத்தித்துறை பொலிசார் சந்தேகநபர்களான செல்வராசா, கந்தப்பு ஆகியோரை தேடி வருகின்றார்கள். (க)

## பகிரங்க சொற்பொழிவு

[நெல்லியடி]

லங்கா சமசமாஜக்கட்சியின் புதியதலைமையிலானவர்களின் பகிரங்க சொற்பொழிவு இம் மாதம் 13ந் திகதி நடைபெறும்.

வடமராட்சிப்பகுதி அமைப்பாளர் திரு எஸ் முருகேசு தலைமையில் இக்கூட்டம்நடைபெறும்.

இப்பகிரங்க சொற்பொழிவில் திருவாளர்கள் வாசுதேவ நாணயக்கார, ஆர் விஜயபாகு, டேவிற்குமார் உட்பட மூன்று பௌத்த பிக்குகளும் உரையாற்றுவார்கள். [க]

## சாரதிக்கு ரிமாண்ட்

[நெல்லியடி]

புலோலி ப நோ கூ சங்க எரிபொருள் நிரப்பும் நிலையக் கொள்ளைக்கு பயன்படுத்தப்பட்ட டாக்ஸி பருத்தித்துறை பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளது.

அதே நேரத்தில் டாக்ஸி சாரதியான ஆனைக்கோட்டை உயரப்புலத்தைச் சேர்ந்த ஏ யேசுராசா சந்தேகத்தின் பேரில் பருத்தித்துறை நீதிமன்றத்தில் பருத்தித்துறை பொலிசாரால் ஆஜர் செய்யப்பட்டார்.

நீதவான் திரு கே ஞானச்சந்திரன் டாக்ஸி சாரதியை அடுத்தமாதம் 9ந் திகதிவரை ரிமாண்டில் வைக்குமாறு உத்தரவிட்டு, டாக்ஸியை பொலிஸ் பாதுகாப்பில் வைக்குமாறும் உத்தரவிட்டார். [க]

## "வடக்கு கிழக்கு

# அபிவிருத்திக்கு ஏற்ற பயிர் மர முந்திரிகை"

[வவனியா]

இலங்கையில் மரமுந்திரிகை செய்கைக்கு நல்ல எதிர் காலம் உண்டு, உலக சந்தையில் மரமுந்திரிகை வகைக்கு பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளது, அயல்நாடான இந்தியாவிலேயே மரமுந்திரிகை செய்கைக்கு ஊக்குவிக்கப்படுகிறது''

மன்னார், நெய்தல் மாநில நலன்புரிசங்கத்தின் ஆதரவில் நடந்த கருத்தரங்கில் வவனியா மாவட்ட மரமுந்திரிகையாளர் சங்க செயலாளர் திரு வி சண்முகநாதன் பேசும்போது மேற்கண்டவாறு கூறினர்.

மன்னார் பொதுசேவை ஊழியர் இளைப்பாற்று மண்டபத்தில் நடந்த இக் கருத்தரங்கில் திரு சண்முகநாதன் மேலும் கூறியதாவது:

இலங்கையில் அரசு, சிறு ஏற்றுமதிப் பொருட்களில் மரமுந்திரிகையையும் ஒன்றாக பிரகடனம்செய்து, ஊக்குவிப்பதற்கு மான்யமும் வங்கி கடன்போன்ற உதவிகளும் செய்து வருகிறது. இதற்கென ஒரு கூட்டுத்தாபனமும் உருவாக்கப்பட்டுள்ளதுடன் பல நூற்றுக்கணக்கான ஏக்கரில் மரமுந்திரிகை செய்யப்பட்டுவருகிறது

மரமுந்திரிகைஎந்தவிதமான நிலத்திலும் தண்ணீர் வசதி குறைந்த இடத்திலும் வளரக்கூடியது. வடக்குக் கிழக்கு மாகாணங்களாகிய வரண்ட பிரதேசங்களுக்கு இது ஒரு வரப்பிரசாதமாகும், தற்பொழுது தரிசாகக் கிடக்கும் ஆயிரக்கணக்கான நிலங்களில் மரமுந்திரிகை பயிரிடலாம்.

இந்தியாவில் உலக வங்கி உதவியுடன் ஊக்கமளிக்கப்படுகிறது. கேரளாவில் மரமுந்திரிகை விதைகளை பதனிட்டு ஏற்றுமதிசெய்ய முன்னூற்றுக்கும் அதிகமான தொழிற்சாலை உண்டு, இத்தொழிற்சாலைகளில் இரண்டு வட்சம் பேர் வேலைசெய்கிறார்கள்,

கோவாவில் மரமுந்திரிகை பழத்திலிருந்து சாராயம் வடிப்பதற்கு 1000 வடிசாலைகள் பதிசெய்யப்பட்டுள்ளது,

விவசாயமும் கைத்தொழிலும் முன்னேற இது தகுந்த பயிர், மன்னார், வவனியா, பூநகரிப் பகுதிகளில் இதனைப் பயிரிட்டு முன்னேற எல்லாரும் முன்வரவேண்டும்,

கருத்தரங்கிற்கு தலைமை வகித்த டாக்டர் ஏ பி பிகுராடோ, தனிப்பட்ட நபர்களுக்கு காணி பெற்றுக்கொடுக்க உதவிசெய்வதாக கூறினர். (க)

# 'மரமுந்திரிகைக்கு ரூ. 3000 மான்யம் வழங்குக'

(யாழ்ப்பாணம்)

ஒரு ஏக்கர் மரமுந்திரிகை செய்யவும் அதனை 4 வருடம் பாதுகாக்கவும் 6000 ரூபா செலவாகுமென்றும், இதில் 3000 ரூபாவை மான்யமாக வழங்குமாறும், வவனியா பிராமணாளன் குளம் மரமுந்திரிகையாளர் சங்கக் கமிட்டி மரமுந்திரி கூட்டுத்தாபனத் தலைவர் திரு. எக்கநாயக்காவைக் கேட்டுக்கொண்டது.

சங்கச் செயலாளர் திரு. என் சண்முகதாசன் மற்றும் சங்க உறுப்பினர்கள் வவனியாவில் வைத்து திரு. எக்கநாயக்காவைச் சந்தித்தனர்.

கூடுதலான மான்யம் மரமுந்திரிகைச் செய்கைக்குத் தரவேண்டுமென இவர்கள் கேட்டுக்கொண்டனர். மற்றைய ஏற்றுமதிப் பொருட்களுக்கு கொடுக்கப்படும் மான்யம் மரமுந்திரிகைக்கும் தரப்படவேண்டும் என்றும் இவர்கள் கோரினார்கள்.

ஒரு ஏக்கர் பயிரிட வரும் செலவுபற்றி விபரமாக அறிவித்தால் நடவடிக்கை எடுப்பதாக மரமுந்திரிகை கூட்டுத்தாபனத் தலைவர் உறுதியளித்தார். [க-அ]

# பரீட்சையில் தோல்வி: இளைஞர் தற்கொலை

[யாழ்ப்பாணம்]

பரீட்சையில் திறமைச் சித்திகளை எதிர்பார்த்துக்கொண்டிருந்த மாணவர் ஒருவர் பரீட்சையில் சித்தியடையாததனால் மனவேதனையடைந்து நச்சுத்திராவகம் அருந்தி தற்கொலை செய்துகொண்டார்.

கொக்குவிலைச் சேர்ந்த சிறிதரனின் மரணசாரணையில் மேற்கண்ட விபரம் தெரிய வந்தது. யாழ். மரணவிசாரணை அதிகாரி திரு,எஸ்,எஸ். பிரான்சிஸ் மரண விசாரணை நடத்தினர்.

ஜி சி ஈ பரீட்சையில் திறமைச்சித்தி அடைவேன் என்று நண்பர்களிடம் கூறியிருந்தாரென்றும். சித்தியடையாததினால் மனவேதனையடைந்து காணப்பட்டாரென்றும் விசாரணையில் கூறப்பட்டது.

விசாரணையின் பின் தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப் பட்டது. [கொ]

ங்கும் போர்வீரன்தான் போரில் வெற்றிபெறமுடியுமே தவிர வெறும் உணர்ச்சியால் எதையும் சாதித்துவிட முடியாது,

தமிழ்த்தேசிய இனத்தின் அழிவுக்காக அரசு எடுத்து வரும் நடவடிக்கைகளை புள்ளி விபரத்துடன் ஜனதிபதி திரு ஜே ஆர் ஜயவர்த்தனவுக்கு அனுப்பிவிட்டு நாம் அவரது பதிலை எதிர்பார்த்து இருக்கிறோம், இன்னமும் எத்தனை நாளைக்குத்தான் பொறுத்திரு

# வவனியா...

[1-ம் பக்கத்தொடர்ச்சி]

ப்போம் என்று சொல்லிவிட முடியாது, கூட்டணி பொதுச் சபையை இம்மாதம் 10ம் திகதி வவனியாவில் கூட்டி சில திட்டங்களைத் தீட்ட கள்ளோம், இந்நிலையில் அதையும் பகிரங்கமாக இங்கு கூற விருப்பவில்லை, கடமை, கண்ணியம், கட்டுப்பாடு காத்து தக்கதருணத்தில் நாம் பிறப்பிக்கும் கட்டளையை ஏற்று ஒன்றுசேருமாறு தமிழ்மக்களை அழைக்கிறேன்,

## தலைவர் சிவா உரை

தமிழர் கூட்டணித் தலைவரும், நல்லூர் எம் பியுமான திரு எம் சிவசிதம்பரம் பேசுகையில் கூறியதாவது:

''இன்றைய சூழ்நிலையில் எமது மக்களைப் பாதுகாக்க வேண்டியது எமது பொறுப்பு. எனவே ஒவ்வொருவரும் தமது வருமானத்தில் ஒரு சதவீதத்தை எமது நிதிக்கு வழங்குவது மிக இன்றியமையாத கடமையாகும். வவனியா மாவட்டத்தை எடுத்துக்கொண்டால், மிகவும் கஷ்டமான சூழ்நிலையில் அங்கு மக்கள் பயத்துடன் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள், இந்துக்கோவில்கள் இருக்கும் இடங்களில் புதைபொருள் ஆராய்ச்சி என்ற போர்வையில் திட்டமிட்ட சிங்களக்குடியேற்றம் நடைபெற்றுவருகிறது.

## 47 முதலே ஏமாற்றம்

1947ம் ஆண்டு முதல் நாம் ஏமாற்றப்பட்டு வருகின்றோம். கல்வியைப் பொறுத்தமட்டில் கூட தரப்படுத்தல் மூலம் தமிழ் மாணவர்கள் நசுக்கப்படுகிறார்கள். இந்நிலையில் நாம் எவ்வாறு சிங்கள மக்களுடன் சேர்ந்து வாழமுடியும் ; எனவே எமக்குரிய நாட்டை நாமே பெற்றுக் கொள்ள வேண்டும். அதற்காக் தக்க நடவடிக்கையில் எம்மை தயார்செய்து கொள்ளவேண்டும்''

வட்டுக்கோட்டை எம் பி திரு த திருநாவுக்கரசு, கோப்பாய் எம் பி திரு எஸ் கதிரவேலுப்பிள்ளை, வண்ணை ஆனந்தன் உட்பட பலர் பேசினர். [கெ-இ]

# இஸ்லாம் கொள்கைகள் தனித்துவம் வாய்ந்தவை

## உபவேந்தர் உரை

[கொக்குவில்]

இஸ்லாம் மதத்தின் கொள்கைகள் தனித்துவம் வாய்ந்தவை, அத்தகைய தனித்துவம் வாய்ந்த ஒரு சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் இன்று உலகம் முழுவதும் பரந்து வாழ்கிறார்கள்,

இவ்வாறு நேற்றுமுன் தினம் மாலை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இராமநாதன் மண்டபத்தில் நடைபெற்ற யாழ் பல்கலைக்கழக முஸ்லிம் மஜ்லிஸ் வெளியீடான 'இன்கிலாப்' புத்தக வெளியீட்டு விழாவின்போது உரையாற்றிய யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் கலாநிதி சு. வித்தியானந்தன் கூறினர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பட்டதாரி மாணவன் ஜனப் எம் ரி அகமட் தலைமையில் இப் புத்தக வெளியீட்டு விழா நடைபெற்றது. நூலின் முதற் பிரதியை முஸ்லிம் சமூகத் தொண்டரான ஜனப் கே என் எம் மீருன் சாகிப் பெற்றுக்கொண்டார்.

துணைவேந்தர் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''ஈழத்தின் பலபாகங்களிலும் பரந்து வாழும் முஸ்லிம் மாணவர்கள் இங்கு கல்வி பயில்கின்றனர். இவர்கள் இஸ்லாமிய மதத்தின் அடிப்படைக் கொள்கைகளையும், கோட்பாடுகளையும் பேணிப் பாதுகாப்பதுடன் நில்லாது, தமது தனித்துவத்தையும் கலை, கலாச்சாரம் ஆகியவற்றையும் வளர்ப்பதற்கு முன்னின்று பணியாற்ற வேண்டும்.

''முஸ்லிம் மாணவர் மத்தியில் எழுச்சியை ஏற்படுத்துவதற்கு இப் புத்தகவெளியீடு இன்றியமையாததாகும். இஸ்லாமிய தத்துவங்களை அனைவரும் புரிந்துகொள்ளக் கூடியதாக இக் கன்னிப் படைப்பு வெளிவந்துள்ளதால் இதன்மூலம் இஸ்லாமிய மதத்தின் கோட்பாடுகளை ஏனைய மதத்தவரும் புரிந்துகொள்ளக்கூடிய வாய்ப்பினை ஏற்படுத்தியுள்ளது,

பல சமூகத்தவர்கள் மத்தியிலும் பல நிகழ்ச்சிகளை சகோதரத்துவ உள்ளத்துடன் இங்கு கல்வி பயிலும் முஸ்லிம்மாணவர்கள் மேற்கொள்ளும் பணி அனைவரையும் கவர்ந்துள்ளது, தொடர்ந்தும் இப் பணி வளர்ச்சி அடையவேண்டும்''

அரபு இஸ்லாமிய நாகரிகத் துறை விரிவுரையாளரும் மஜ்லின் போசகருமான மௌலவி கே எம் எச் காலித்தின் பேசுகையில் பல இன மக்கள் வாழும் இந்நாட்டில் இஸ்லாமிய கோட்பாடுகளை மனதில்கொண்டு வாழும் எல்லா மக்களையும் அன்பாக அணைத்துச்செல்லும் இம் மஜ்லிஸ் தொடர்ந்தும் இப் பணியைச் சிறப்பாக நிறைவேற்றவேண்டுமென்று வாழ்த்துத் தெரிவித்தார்.

வெளியீட்டுரையை பத்திராதிபர் எம் எஸ் எம் அஸ்லாஹ் நிகழ்த்தினர், மதிப்புரைகளை கலாநிதி அ சண்முகதாஸ், செல்வன் எம் இராசரத்தினம், எம் நாகேஸ்வரன், ஜனப் எம் எச் பாறூக் ஆகியோரும் நன்றி உரையை செல்வி பாக்கியா ஜலீத் ஆகியோரும் இவ் வெளியீட்டுக்கான பலவகையான உதவிகளையும் தளீம் ஹாஜியார், கே என் எம் மீருன்சாகிப் ஆகியோரும் வழங்கினர். [அ]

# 'சாவகச்சேரி இந்துவின் தரம் மேலும் உயரும்'

(யாழ்ப்பாணம்)

''எமது தொகுதியிலுள்ள இக்கல்லூரி சிறப்பாக இயங்கியதால ஒரு முதல் தரமான மத்திய மகாவித்தியாலயமாகத் தரமுயர்ந்தது. இது யாவருக்கும் மகிழ்ச்சி தருவதாகும். திறமைமிக்க சகல மாணவருக்கும் உயர்கல்வி பெற வாய்ப்பளிக்கும் வகையில் இங்கு இடவசதிகள் செய்து கொடுப்பதுடன் விடுதி வசதியும் விரைவில் பூர்த்திசெய்யப்படும். அதிபரின் விடாமுயற்சியாலும் நிர்வாகத் திறமையாலுமே இக்கல்லூரி சீராக இயங்கி வருகிறது.''

இவ்வாறு சாவகச்சேரி இந்துக் கல்லூரி பெற்றேர் ஆசிரியர் சங்க நிர்வாக சபைக் கூட்டத்தில் சாவகச்சேரி எம், பி. திரு வி என் நவரத்தினம் பேசுகையில் குறிப்பிட்டார்

கல்லூரி அதிபர் திரு பூ வெற்றிவேலு தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் வட்டாரக்கல்வி அதிகாரி திரு சி இராசநாயகம் பேசுகையில், ''பல்கலைக்கழகத்துக்குத் தெரிவு செய்யப்படும் மாணவர் தொகையில் இக்கல்லூரியே முதலிடம் வகிக்கிறது, இக்கலூரியில் விடுதிவசதியும் அமைத்து மேலும் தரமுயர்த்த வேண்டும்'' என்றார்.

திரு கு சங்கரப்பிள்ளை, திரு மு கதிரேசு ஆகியோரும் பேசினர் [கு-அ]

## கைதடியில் 3 தினங்கள்

# சைவச் சிறுவர் இல்லக் கொடிநாள் விழா

[யாழ்ப்பாணம்]

கைதடி சைவச் சிறுவர் இல்லக் கொடிநாள் விழா எதிர் வரும் 10ம்திகதி சனிக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து மூன்றுநாட்கள் நடைபெறவிருக்கிறது

உரும்பராய் பாலர் சின்னத்தம்பி அரங்கில் பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் ஆரம்பமாகும் முதல் நாள் விழாவில் நல்லூர் எம் பி திரு மு சிவசிதம்பரம், உடுப்பிட்டி எம் பி திரு த இராசலிங்கம், வவனியா எம் பி திரு தா சிவசிதம்பரம், ஊர்காவற்றுறை எம் பி திரு கா பொ இரத்தினம், கோப்பாய் எம் பி திரு சி கதிரவேற்பிள்ளை, யாழ்ப்பாண எம் பி திரு வெ யோகேஸ்வரன், சாவகச்சேரி எம் பி திரு வ ந நவரத்தினம், மன்னார் அரசாங்க அதிபர் திரு நா ஜெகநாதன் ஆகியோர் ஆசியுரை நிகழ்த்துவர்

11-ம் திகதி ஞாயிற்றுகிழமை சங்கப்பூ தங்கம்மா ஆறுமுகம் அரங்கில் திருமதி சரஸ்வதி கணேஸ்வரன் தலைமையில் நடைபெறும் விழாவில் யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு நா சுப்பிரமணியம், திரு மு இராமலிங்கம், திருமதி தவமலர் அர்ச்சுனன் ஆகியோர் சிறப்புச்சொற்பொழிவாற்றுவர்.

12ம் திகதி திங்கட்கிழமை மூன்றும் நாள்நிகழ்ச்சி பலாலி ஸ்ரீ தம்பையா அரங்கில் அரஸ்கோ அதிபர் திரு இ அரசரத்தினம் தலைமையில் நடைபெறும். [கு-அ]

## தொடர்ந்து பணிபுரிவார்

(நெல்லியடி)

மட்டக்களப்பு கூட்டுறவுத் திணைக்களத்திலைச் சேர்ந்த கூட்டுறவுப் பரிசோதகர் திரு. சி. கந்தசாமி கட்டைவேலி நெல்லியடி ப. நோ. கூ. சங்கத்தின் பதில் பொது முகாமையாளராக மேலும் இரண்டு மாதங்களுக்குப் பணிபுரிவார். [ச]

## கோயில்கதவு தீக்கிரை

[புலோலி]

மந்திகை கண்ணகைஅம்மன் கோவில்க் கதவு விஷமிகளால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள 6 ஸ்ரீ தொடர்பிலக்கமுடைய யமகா RD 200CC மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு, சனிக்கிழமை தொடர்புகொள்ளவும், எம் இரத்தினலிங்கம். 'மாணிக்கம்'' கொக்குவில் மேற்கு, கொக்குவில். 1822

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்க அச்சகத்தில் 1979-ம் ஆண்டு மார்ச் மாதம் 5-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a Newspaper at the General PostOffice The Eelanaadu P B No: 49, Telegram: Eelanaadu, Telephone: 389, Registered as a News Paper in Sri Lanka.-